# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1942/15 - 2015 නොවැම්බර් මස 26 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.11.26

*1942/ 15 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 26 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 21/78* (xiv)

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*20(4) என்னும் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 20(4) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஸ்மன் கிரிஎல்ல ஆகிய நான், இலங்கை, கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் அலுவல்களின் நிர்வாகம் பாரதூரமாக சீர்குலைந்துள்ளதெனவும் சொல்லப்பட்ட நிறுவகத்தின் அதிகாரிகள் வழமையான நிலைமைகளை மீள நிலைநாட்டுவதற்குத் தவறியுள்ளனர் எனவும் திருப்திப்படுவதன் மேல், மேற்கூறப்பட்ட சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையின், கட்டளைச் சட்டத்தின், நியதிச்சட்டத்தின், துணை விதியின், ஒழுங்குவிதியின் அல்லது விதியின் கீழ் இலங்கை, கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் பணிப்பாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அல்லது அவர் மீது சுமத்தப்பட்டுள்ள அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ள தத்துவத்தை, கடமையை அல்லது பணியை முறையே பிரயோகிக்கும், புரியும் அல்லது நிறைவேற்றும் நோக்கத்திற்காக சொல்லப்பட்ட பணிப்பாளருக்குப் பதிலாக தகுதிவாய்ந்த அதிகாரியாக இருப்பதற்கு பேராசிரியர் ஜயந்த வலிஹிந்த என்பவரை 2015, நவெம்பர் 26 ஆந் திகதியிலிருந்து வலுவுக்கு வருமாறு இக்கட்டளை மூலம் நியமிக்கின்றேன்.*

லக்ஸ்மன் கிரிஎல்ல,
உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்.

கொழும்பு,
*2015, நவெம்பர் 24.*

*12 - 356*



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

| | |
|---|---|
| | |
| | |
| | |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.